Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 4, 2022

வெள்ளிக்கிழமை நவம்பர் 04, 2022 | ஒளி: 08 கதிர்: 136 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE



இந்த வாரத்தில்

## எரிபொருள்விலை திருத்தம் இல்லை

இந்த வாரம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று அறிவித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எரிபொருள் தேவைக்கான முன்பதிவுகளை மேற்கொள்ளுமாறு விற்பனையாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

தொடர்ச்சி P2

## புலிகள் எவரும் சரணடையவில்லை

Exclusive

### திட்டவட்டமாக மீண்டும் மறுத்தது இராணுவம்

■ பா.நிரோஸ்

இறுதி யுத்த காலப் பகுதியில் இலங்கை இராணுவத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை என இலங்கை இராணுவம் மீண்டும் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், 'தமிழ் மிரர்' ஊடகவியலாளர் பா.நிரோஸ் தகவலறியும் ஆணைக் குழுவிடம் முன்வைத்திருந்த மேன்முறையீடு நேற்று (03) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இலங்கை இராணுவத்தின் சார்பில் ஆணைக் குழு முன்பாக சூம் தொழில்நுட்பம் ஊடாக இணைந்திருந்த இராணுவத்தின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரி பிரிகேடியர் கே.என்.என்.கே நாகவத்த இவ்வாறு தெரிவித்தார்.

2019.04.04 அன்று தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இலங்கை இராணுவத்திடம் இறுதி யுத்தக் காலப் பகுதியில் சரணடைந்த புலிகள் தொடர்பான தகவல்கள்

தொடர்ச்சி P2



மொட்டுக் கட்சியினர்

## தேர்தலுக்கு அஞ்சுவது ஏன்?

■ பா.நிரோஸ்

நாம் ஒருபோதும் தேர்தலைக் கண்டு அஞ்சவில்லை. தேர்தலுக்கு முகங்கொடுக்க எந்நேரமும் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள், ஏன் தேர்தலை நடத்த அஞ்சுகிறார்கள் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் தவிசாளருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும்

## முன்மொழிவுகளில் முன்னேற்றம் இல்லை

- சபாநாயகருக்கு ஜனாதிபதி ரணில் கடிதம்
- தேசிய சபை மாத்திரமே ஸ்தாபிப்பு
- 5 இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கவில்லை
- பட்ஜெட் அலுவலகத்தை நிறுவவில்லை

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர், நாட்டில் நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அமல்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ஜனாதிபதி நேற்று (03) அனுப்பியுள்ள எழுத்துமூல கடிதத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இலங்கையின் கடன் மறுசீரமைப்பில்

## மௌனம் காக்கிறது சீனா

### இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகளில் இணக்கமில்லை

■ ஆர்.யசி

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை பெற்றுக்கொள்ளும் நோக்கில், இலங்கைக்காக கடன் மறுசீரமைப்பை முன்னெடுக்கும் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் நேற்று (03) சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது. இலங்கைக்கான இருதரப்பு கடன் வழங்குநர்கள், லஸாட் மற்றும் கிளிஃபோர்ட் நிதி நிறுவன பிரதிநிதிகள், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2



அலைபேசி விவகாரம்

## திலினியை நவம்பர் 24இல் ஆஜர்படுத்தவும்

பாரிய நிதி மோசடி குறித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி, சிறைச்சாலைக்குள் அலைபேசி வைத்திருந்த குற்றச்சாட்டு

தொடர்ச்சி P2

அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்தை

## 80 % மக்கள் எதிர்க்கின்றனர்

### 'வேர்ட்டே ரிசேர்ச்' நிறுவனம் தெரிவிப்பு



■ ஆர்.யசி

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைத்திட்டங்கள் மற்றும் நெருக்கடி நிலைமைகளில் அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுடன், நாட்டு மக்களில் 10 சதவீதமானவர்கள் மட்டுமே இணக்கம் தெரிவிப்பதாகவும்,

தொடர்ச்சி P2





இலங்கைக்கு

## வழங்கிய உதவியை மீட்டுப்பார்க்கிறது சீனா

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இலங்கைக்கு கடந்த ஐந்து மாதங்களில் வழங்கப்பட்ட ஒத்துழைப்புகள் குறித்து சீனாவில் உள்ள இலங்கை தூதரகம் தெளிவுபடுத்தியுள்ளது. இதில் பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக 5,500 மெற்றிக் தொன் அரிசியும், 3 பில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகளும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக சீன தூதரகம் தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வேலைத்திட்டம், அத்துடன் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான 70 சதவீத உத்தியோகபூர்வ சீருடைகள் எதிர்காலத்தில் வழங்கப்படும் எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

உரிய திகதியில்

## தேர்தலை நடத்த எதிர்பார்க்கிறோம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதிக்குப் பிறகு, தேர்தல் ஆணைக்குழுவுக்கு சட்டரீதியான அதிகாரம் கிடைத்துள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட தேர்தல் சட்ட திட்டங்கள் மறுசீரமைப்பு செய்து அதனை பிரபல்யப்படுத்துவது தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 5 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச

ஐந்து வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளதாக அறிவித்துள்ள லங்கா சதொச நிறுவனம், நேற்று (03) முதல் அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்று அறிவித்தது.

வெள்ளைச் சீனி, கோதுமை மா, டின் மீன், தாய்லாந்து நெத்தலி, சிவப்பு பருப்பு ஆகியவற்றின் விலைகளையே குறைத்துள்ளதாக குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனி 22 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 238 ரூபாயாகவும், ஒரு கிலோ கிராம் கோதுமை மா 96 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலை 279 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



பாதிக்கப்பட்ட தரப்புக்கான

## நீதிப் பொறிமுறை அவசியம்

### நீதி அமைச்சரிடம் வலியுறுத்தினார் அமெரிக்க தூதுவர்

■ ஆர்.யசி

வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் பணிகள் சிறப்பானதாக உள்ளபோதிலும், நல்லிணக்கத்தை வலுப்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் துரிதமாக செயற்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

கெஹலியவுக்கு எதிரான வழக்கில்

## முன் விசாரணைக்கு திகதி குறிப்பு




சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹின்கந்த ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கின் முன் விசாரணையை நடத்துவதற்கான தினமாக, டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதியை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த, நேற்று (03) நிர்ணயித்தார்.

2012 மார்ச் 15 முதல் 2012 ஏப்ரல் 14 வரையிலான காலப்பகுதியில்,

தொடர்ச்சி P2

## டயானாவின் மனுவை விசாரிக்க தீர்மானம்

ஐக்கிய மக்கள் சக்தி, தன்னை கட்சியில் இருந்து நீக்கியமையை சவாலுக்கு உட்படுத்தி, தற்போதைய இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தாக்கல் செய்திருந்த மனுவை அடுத்த வருடம் மார்ச் மாதம் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம், நேற்று (03) தீர்மானித்தது.



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் உட்பட பலர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## புலிகள் எவரும் எம்மிடம்...

கோரப்பட்டிருந்தன. எனினும் புலிகள் எவரும் சரணடையவில்லை என இராணுவம் பதில் வழங்கியிருந்தது. இராணுவத்தின் பதிலுக்கு எதிராக 2019 ஆம் ஆண்டு தகவல் அறியும் ஆணைக் குழுவில் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த மேன்முறையீட்டை பரிசீலினை செய்வதில் ஆணைக்குழுவில் சில தவறுகள் இடம்பெற்றதாகவும், இதனால் மூன்று வருடங்களுக்குப் பின்னர் மேன்முறையீட்டை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதாகவும், தகவல் அறியும் ஆணைக்குழு வருத்தம் தெரிவித்தது. யுத்த காலப்பகுதியில் யுத்த பிரதேசத்தில் இருந்து சாதாரண மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்தார்கள் எனவும், தங்களிடம் சரணடைந்தவர்கள் புலிகளா? சாதாரண நபர்களா என்பது தமக்கு தெரியாது. அவர்கள் யார் என்பதை அதிகாரிகளே கண்டனர். பரபரப்பான யுத்த சூழல் என்பதால் நாம் பொறுப்பேற்றுக்கொண்ட நபர்கள் தொடர்பான பதிவுகள் எதனையும் இராணுவம் மேற்கொள்ளவில்லை என தெரிவித்தது. எனினும், இதனை மறுத்த சட்டத்தரணி ஸ்வஸ்திகா, தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களிடம் சரணடைந்ததாக அப்போது இராணுவத்தின் பேச்சாளர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வெளிப்படுத்தியிருந்த செய்தி குறிப்பை ஆணைக்குழுவுக்கு வழங்கினார். இதனை ஏற்றுக் கொண்ட தகவல் ஆணைக்குழு, இதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு மேன்முறையீட்டை செய்திருந்த ஊடகவியலாளர், இராணுவத்திடம் புலிகளின் உறுப்பினர்கள் சரணடைந்தமைக்கான ஆதரங்களை எழுத்துமூல சமர்ப்பணமாக ஆணைக்குழுவுக்கு 10 நாட்களில் வழங்க வேண்டும் எனவும், இந்த எழுத்துமூல சமர்ப்பணத்துக்கு இராணுவம் பதிலளிக்கும் எனவும் அறிவித்தது.

## எரிபொருள் விலை...

விலை குறைப்பை எதிர்பார்த்து எரிபொருட்களை முற்பதிவு செய்யாததன் காரணமாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருள் இருப்பு இல்லாத நிலை காணப்படுவதாகவும் அமைச்சர் தனது டுவிட்டரில் நேற்று (03) தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி ஆகிய நிறுவனங்களிடம் போதியளவு எரிபொருள் கையிருப்பு இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே, தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான எரிபொருட்கள் கையிருப்பில் இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வாரத்தில் விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டா என்றும் தங்களது எரிபொருள் தேவைக்கான முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தேர்தலுக்கு...

சுதந்திர மக்கள் காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தேர்தலுக்கு எந்நேரமும் முகங்கொடுக்க தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் கூறுகிறார்கள். தேர்தலில் எங்களுக்குப் பாரிய வெற்றி கிடைக்கும் என்கிறார்கள். அப்படி என்றால் தேர்தலை நடத்துவதற்கு ஏன் அஞ்சுகிறார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

மக்கள் பெரும் பிரச்சினையில் இருக்கிறார்கள். இதுவே நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தில் பிரதிபளித்தது. வரவு செலவு திட்டத்துக்குப் பின்னர் இந்நிலைமைகளில் எந்தளவு மாற்றம் ஏற்படும்? அரசாங்கத்தின் வருமான வரித் திருத்தங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரி திருத்தம் அமுலானால் நாட்டு மக்களால் வாழ முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

மக்கள் இவற்றுக்கு எதிராகவே நாட்டில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். மக்கள் இவ்வாறு போராடுவது நியாயமான ஒன்று. இதனைத் தடுப்பதற்கே அரசாங்கம் தேர்தலைக் காலந்தாழ்த்தி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துகிறது. அதேபோல் பொலிஸ் கட்டளைச் சட்டத்தைவிட நாட்டின் அரசியலமைப்பு மேலானது எனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தின்போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை போராட்டக்காரர்கள் புறக்கணித்ததாக நான் எதனையும் அவதானிக்கவில்லை எனவும் பீரிஸ் கூறினார்.

# முன்மொழிவுகளில் முன்னேற்றம் இல்லை

இந்த முன்மொழிவுகளில், தேசிய சபையை ஸ்தாபிக்கும் நடவடிக்கை மாத்திரமே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகால முறைமை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட யோசனைகளில் வங்கி விவகார மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பான குழு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குழு மற்றும் வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான குழு ஆகியவற்றை வங்கி விவகாரங்கள் தொடர்பில் நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டாலும், அவை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி சபாநாயகருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கவும், பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவவும் முன்மொழியப்பட்ட போதும் அவையும் செயற்படுத்தப்படவில்லை.

இந்த பரிந்துரைகளின்படி, 17 பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஸ்தாபிக்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுக்கான தலைவர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை எனவும் அவற்றுக்கு நியமிக்கப்படும் இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல் இன்னும் தயாரிக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் இதனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் முறைமை மாற்றம் மிக விரைவாக எட்டப்படும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்துக்கான சட்டமூலத்துக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்ற பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்பிக்க உத்தேசித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

## மௌனம் காக்கிறது...

இலங்கை தற்போது எதிர்கொண்டுவரும் நிதி நெருக்கடி நிலைமைகள், மற்றும் இலங்கைக்கு உடனடியாக தேவைப்படுகின்ற நிவாரணங்கள் குறித்து நிதி அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளதுடன், பொருளாதார மேம்பாட்டுக்கான புதிய வேலைத்திட்டங்கள் குறித்து மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். மேலும், இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்களை பொது இணக்கப்பாட்டிற்கு கொண்டுவரும் விதமாக இந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், இதன் பெறுபேறுகள் மூலமாக மட்டுமே சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை கருத்தில் கொண்டு, இந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தமிழ் மிரருக்கு தெரிவித்தார்.

மேலும், இருதரப்பு கடன் வழங்குநர்கள் இலங்கைக்கான ஒத்துழைப்புகளை வழங்குவதாக கூறியுள்ள போதிலும், இன்னமும் இறுதி நிலைப்பாடு எதனையும் எட்டவில்லை எனவும், இலங்கையின் பிரதான கடன் வழங்குநர் நாடான சீனாவின் நிலைப்பாடு என்ன என்பது விரைவில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அது குறித்த இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாவும் நிதி அமைச்சின் மூலமாக உறுதிப்படுத்த முடிந்துள்ளது.

## 80% மக்கள்...

80 சதவீதமானவர்கள் இணங்கவில்லை எனவும் 'வேர்ட்டே ரிசேர்ச் ' முன்னெடுத்துள்ள கருத்துக்கணிப்பில் வெளிப்படுவதாக 'வேர்ட்டே ரிசேர்ச் ' நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரும், பொருளாதார நிபுணருமான கலாநிதி நிஷான் டி மெல் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு தெரியாது சர்வதேச நாணய நிதியத்துடன் இரகசியமாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது முறையானதல்ல. சர்வதேச நாணய நிதியத்துக்கும் நாட்டின் நிலைமைகள் முழுமையாக தெரியப்போவதில்லை. அவர்கள் அரசாங்கம் கூறும் காரணிகளை வைத்துக்கொண்டே தமது யோசனைகளை முன்வைப்பார்கள் . அதன் பின்னரே நிதி உதவிகளை செய்வதா இல்லையா என்பதை தீர்மானிப்பார்கள். சர்வதேச நாணய நிதியத்துடனான கடந்த பத்து ஆண்டுகால வேலைத்திட்டங்களை அவதானித்தால், இலங்கை முன்னெடுப்பதாக கூறிய இலக்குகள் எதனையும் முழுமையாக நிறைவேற்றவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் மட்டுமல்ல, வரவு செலவு திட்டத்தில் கூட இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் இலக்குகளை முழுமையாக அடைந்ததில்லை. இதனை தெரிந்துகொண்டும் இதற்கு முதல் செய்த தவறை தொடர்ந்தும் செய்தால் எம்மால் நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

நாடு நெருக்கடியில் இருந்து விடுபட வேண்டும் என்றால், கட்டமைப்பு ரீதியான இலக்குகளை நாம் நெருங்க வேண்டியுள்ளது. அதனையே சர்வதேச நாணய நிதியமும் எமக்கு வலியுறுத்துகின்றது. கட்டமைப்பு ரீதியில் வெற்றி கொள்வதற்கான ஆலோசனைகளை அவர்கள் வழங்குகின்றனர். ஆனால் ஊழல் அரசியலே பொருளாதாரத்தை மோசமாக பாதித்துள்ளது, ஊழலை முழுமையாக நிறுத்தினால் மட்டுமே வெற்றிகொள்ள முடியும், ஆகவே அதனை நாமே தீர்மானிக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் முதல் தடவையாக இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் உள்ள மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால், எமது அரசியல் கட்டமைப்பில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்பதாகும். அரசியல் நெருக்கடிகளை தவிர்த்தால் மட்டுமே பொருளாதார ரீதியில் எம்மால் வெற்றிபெற முடியும்.

நாம் முன்னெடுத்த ஆய்வின் படி, இந்த ஆண்டு ஓகஸ்ட் மாத கணிப்புகளுக்கு அமைய அரசாங்கத்தின் கொள்கைத்திட்டங்களுடன் 10 சதவீதமானவர்கள் இணக்கம் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுடன் 80 சதவீதமானவர்கள் இணைக்கவில்லை. 7 சதவீதமானவர்கள் எந்தவித பதிலையும் தெரிவிக்கவில்லை என்றார்.

## 5 அத்தியாவசிய பொருட்களின்...

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் டின் மீனின் விலை 105 ரூபாயால் குறைக்கப்பட்டு 585 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதுடன், 200 ரூபாய் குறைக்கப்பட்டுள்ள ஒரு கிலோ கிராம் தாய்லாந்து நெத்தலி 1300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பின் விலை 17 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 398 ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முன் விசாரணைக்கு...

வெகுஜன ஊடகத்துறை அமைச்சராக கெஹலிய கடமையாற்றிய போது, தனது ஒருமாத தொலைபேசிக் கட்டணத்தை அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் நிதியைப் பயன்படுத்தி செலுத்துவதற்கு அதன் தலைவரை தூண்டியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 230,984 ரூபாய் 15 சதத்தை வவுச்சர் மூலம் செலுத்துமாறு ஜயம்பதி பண்டார ஹின்கந்தவை தூண்டியதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அதிகுற்றப்பத்திரத்தில் சில திருத்தங்களை செய்வதற்கு முறைப்பாட்டாளர் தரப்பு எதிர்பார்ப்பதாக ஆணைக்குழு, மன்றுக்கு அறிவித்தது. வழக்கு முன்விசாரணைக்கு திகதி குறிக்கப்பட்டுள்ள நிலையில் அதிகுற்றப்பத்திரத்தில் திருத்தங்களை செய்வதற்கு தாம் ஆட்சேபிப்பதாக பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸ அறிவித்தார்.

அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி பண்டார ஹின்கந்த குற்றச்செயலுக்கு உதவினார் என்று குற்றஞ்சாட்டியுள்ள ஆணைக்குழு அவரை பிரதிவாதியாக பெயரிட்டுள்ளது. கடந்த அமர்பில் அதி குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டு, பகிரப்பட்டதையடுத்து பிரதிவாதிகள் இருவரையும் தலா 30,000 ரூபாய் பெறுமதியான ரொக்கப் பிணையிலும் 350,000 ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிபதி அனுமதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதிப் பொறிமுறை...

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவிற்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் நேற்று (03) நீதியமைச்சில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள், மற்றும் நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க கையாளும் நகர்வுகள் குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களை பகிர்ந்துகொண்டுள்ளனர்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக அரசியலமைப்பின் 21வது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமைக்காகவும், சட்ட முறைமையை புதுப்பிப்பதற்கு பல புதிய சட்டங்களை ஏற்றுக்கொண்டமைக்காகவும் தூதுவர் ஜூலி சங் தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். குறிப்பாக இலங்கையில் ஊழலை தடுப்பதற்காக தற்போதைய அரசாங்கம் புதிய ஊழல் எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வருவதற்கும் பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கும் எடுத்துள்ள நடவடிக்கைகளை தூதுவர் பாராட்டியுள்ளார். மேலும், வடக்கு கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நலன்புரித்திட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் மூலம் அவற்றின் முன்னேற்றம் ஆகியவற்றையும் தூதுவர் பாராட்டியதுடன், நல்லிணக்கத்தை வலுப்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் துரிதமாக செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தெளிவுபடுத்தியுள்ள அமைச்சர் விஜயதாஸ, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி பொறிமுறையை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் அடுத்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் நிறைவடையும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், வடக்கு கிழக்கில் காணி விடுவிப்புகள் விரைவில் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் புதிய அரசியல் அமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை காண வேண்டியது அவசியம். அதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## திலினியை...

தொடர்பில் நவம்பர் 24ஆம் திகதி அவரை சிறைச்சாலை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி தலைமையில் நேற்று கூடிய சிறைச்சாலை நீதிமன்றத்தில், இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, திலினி பிரியமாலி, 128 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளதாக 12 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அண்மையில் அறிவித்திருந்தார்.

மேலும், சந்தேகநபர் விளக்கமறியலில் இருந்தபோது பல அலைபேசிகளைப் பயன்படுத்தியதாகவும், அவரை பிணையில் விடுவிக்க 3 கோடி ரூபாய் கோரி, நபர் ஒருவரை தொடர்பு கொண்டமை விசாரணைகளில் இருந்து தெரியவந்தாகவும் சீ.ஐ.டியினர் கோட்டை நீதவான் நீதிமன்றில் அறிவித்திருந்தனர்.

பிரதான சந்தேகநபரான திலினி, குறித்த மோசடியுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் திலினியின் காதலரான இசுறு பண்டார, பொரளை சிறிசுமண தேரர் ஆகியோர் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வழங்கிய உதவியை...

மேலும், இலங்கையின் விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளில் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, 10.6 மில்லியன் லிட்டர் டீசலை சீனா நன்கொடையாக வழங்குகிறது. நவம்பர் மற்றும் டிசம்பருக்கு இடையில் இந்த எரிபொருள் இறக்குமதிக்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், மேலதிக உதவிகளை சீனா இலங்கைக்கு தொடர்ந்தும் வழங்கும் எனவும் தெரிவித்துள்ளது.

## தேர்தலை நடாத்த...

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகப்பூர்வ காலம் இரண்டு வருடங்கள் நீடிக்கப்பட்ட காலம் உள்ளடங்களாக உத்தியோகப்பூர்வ காலமானது, அடுத்த வருடம் மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கால பிரச்சினை ஏற்படாது விட்டால் உரிய திகதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4917 எனவும், ஆனால் தற்போதைய முறைமையின்படி 8911 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருப்பதாகவும் அதனைக் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்ப ட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, நுவரெலியா பிரதி தேர்தல் ஆணையாளர் திரு.லஹிரு கலும்பிட்டிய மற்றும் நுவரெலியா மாவட்ட அரச அதிகாரிகள், என பலரும் கலந்துகொண்டனர்.

## டயானாவின் மனுவை...

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தால், 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் தன்னை கட்சியில் இருந்து வெளியேற்றுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அது கட்சியின் யாப்பை மீறும் வகையான தீர்மானம் என அறிவிக்குமாறு மனுவில் கோரியுள்ளார்.

அரசாங்கத்தின் உறுப்பினர் அல்லாத தான், கட்சியின் யாப்புக்கு அமைய சுதந்திரமாகவும் தனது மனசாட்சிக்கு இணங்கவும் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் என்றும் கட்சி உறுப்புரிமையிலிருந்து தன்னை நீக்குவதற்கான தீர்மானம் சட்டவிரோதமானது என்றும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலோட்டமான ஒழுக்காற்று விசாரணையை நடத்துவது இயற்கை நீதி மற்றும் நடைமுறை உரிமைகளை மீறுவதாக அறிவிக்குமாறும் தனது மனுவில் டயானா எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

## அரசியலமைப்பு பேரவை உருவாக்கப்படுகிறது

21ஆவது திருத்தச் சட்டம் அமலுக்கு வந்துள்ளதால், அரசியலமைப்பு பேரவையை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை பாராளுமன்ற அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனை பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க தஸநாயக்க உறுதி செய்துள்ளதோடு, அரசியலமைப்பு பேரவையை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றம் எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

17ஆம், 19ஆம் திருத்தச் சட்டங்களின்படி நாட்டில் அரசியலமைப்பு பேரவை கடந்த காலங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், அதன் பின்னர் கொண்டுவரப்பட்ட 18ஆவது, 20ஆவது திருத்தச் சட்டங்களால் அரசியலமைப்புப் பேரவை பாராளுமன்ற பேரவையாக மாற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



### பயங்கரவாதத்தடை சட்டத்தின் பயன்பாடு குறித்து

## ஐரோப்பிய ஒன்றியம் கவலை

ஐரோப்பிய ஒன்றியம், ஜிஎஸ்பி அர்ப்பணிப்புகளுக்கான தமது உறுதிமொழிகளில் இலங்கை உறுதியான முன்னேற்றத்தை ஊக்குவித்துள்ளதாக இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆளுகை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஆறாவது செயற்குழு, 2022 ஒக்டோபர் 28ஆம் திகதி கொழும்பில் கூடியதாக இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான வழக்கமான இருதரப்பு தொடர்புகளின் பின்னணியில், இந்தச் செயற்குழு கூட்டம் இடம்பெற்றது. இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏற்பட்டுள்ள அண்மைய முன்னேற்றங்கள், மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகள் மற்றும் சட்ட முன் முயற்சிகளை நடைமுறைப்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இதன்போது நல்லிணக்கத்தில் முன்னேற்றம் குறித்து இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விளக்கமளித்தது. தற்போதைய முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிப்பதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு தனது உறுதிப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் உறுதிப்படுத்தியது. அதேநேரம் மனித உரிமைகள் முன்னேற்றத்தில் நீதி மற்றும் நல்லிணக்கத்தின் மூலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை இலங்கையும் ஐரோப்பிய ஒன்றியமும் மீண்டும் வலியுறுத்தின.

இந்நிலையில் அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை மீள ஸ்தாபிப்பதன் மூலம் ஜனநாயக நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் முக்கிய நிறுவனங்களின் சுயாதீன கண்காணிப்பு, பொது ஆய்வு மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிவித்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுசீரமைக்க மார்ச் 2022 இல் இலங்கை எடுத்த நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம், ஏற்றுக்கொண்டதுடன், அதன் உறுதிமொழிகளுக்கு இணங்க மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியது.

எனினும் அந்த சட்டத்தின் அண்மைக்கால பயன்பாடு குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை தெரிவித்தது. ஏனினும் மிகவும் அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை குறிப்பிட்டது. இரு தரப்பினரும் சிறுபான்மையினரின் நிலைமை மற்றும் வெறுப்பு பேச்சுக்கு தீர்வு காண எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதித்தனர்.

### இலங்கையின் பொருளாதாரத்துக்கு

# ஒத்துழைப்பை வழங்கத் தயார்

### கனடிய வர்த்தக சமூகத்தினர் இணக்கம்

இலங்கையில் தற்பொழுது காணப்படும் பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க கனடிய வர்த்தக சமூகத்தினர் இணக்கம் தெரிவித்தனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள கனடிய வர்த்தகத் தலைவர்கள் குழு பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (03) பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த இணக்கப்பாட்டைத் தெரிவித்தனர்.

இலங்கையுடனான நட்புறவை மேம்படுத்துவதற்குத் தாம் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்த இக்குழுவினர், இலங்கையிலுள்ள இளம் தொழில்முனைவோர் தத்தமது நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவை வழங்க விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான ஒருங்கிணைப்பு செயலகமொன்று இலங்கையில் ஸ்தாபிக்கப்படவிருப்பதாகவும், இதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் வருகை தந்திருந்த கனேடிய வர்த்தக சமூகத்தினருக்கு சபாநாயகர் தெரிவித்தார். இதன் ஊடாக பொருளாதார அபிவிருத்திக்கு சம்பந்தப்பட்ட துறையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்ததுடன், இரு தரப்பினருக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான அவசியத்தை வலியுறுத்தினார். அத்துடன், இந்நாட்டிலுள்ள பாடசாலை கட்டமைப்பில் உருவாக்கவுள்ள புதிய வேலைத்திட்டங்களில் கனடிய வர்த்தக சமூகத்தினரை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.









### பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள்

## வர்த்தகர்களுக்கு எதிராக பாய்ந்தது சட்டம்.

ஏ.எல்.எம். ஷினாஸ்

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மருதமுனையில் உள்ள உணவகங்கள், பல சரக்கு கடைகள் எனப் பல நிறுவனங்களுக்குள் நேற்று (03) சுகாதார அதிகாரிகள் திடீர் விஜயம் செய்து பரிசோதனை மேற்கொண்டனர். கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் கல்முனை பிரதேச சுகாதார சேவைகள் பணிமனையின் டொக்டர் ஏ.எஸ்.எம் பௌஸாத், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதர்களான ஐ.எல்.எம். லாபிர், ரி. வரதராஜன், எஸ். ஜீவராஜ், ஜே.எம் நிஜாமுதீன் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இணைந்து இந்தத் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன் போது மனித பாவனைக்கு உதவாத காலாவதியான சட்டத்துக்கு முரணான வகையில் காணப்பட்ட உணவுப் பொருட்கள். பாவனைக்கு பொருத்தமற்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன். விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.




கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி துளசி – ஷால்க்ரம திருக்கல்யாணம் நடைபெற உள்ளது. பக்தர்கள் அனைவரும் இத்திருக்கல்யாண வைபத்தில் கலந்துகொள்ள வேண்டுமென ஆலய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

### அமைச்சுப்பதவியை

## இராஜினாமா செய்வது குறித்து சிந்திக்கிறேன்



தான் வகிக்கும் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துவிட்டு முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தில் இணைந்துகொள்வது குறித்து சிந்தித்து வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கமானது நாட்டின் அவசியமான மாற்றங்களுக்காக குரல் எழுப்பி வருகின்றது. அவர்களின் வேலைத்திட்டங்களை எம்முடன் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

நாடாக முன்னோக்கி செல்வதற்கு அதுவே சிறந்த வழி என கருதுகின்றேன். நான் எனது அரசியல் வாழ்க்கையிலிருந்து விடைபெற்று தேசிய இயக்கத்தில் இணைய விரும்புகின்றேன் எனவும் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலின் முழு கருத்தும் பிழையானது. இது இனம், மதம் என பிளவுபட்டுள்ளது. நாங்கள் பிளவுபட்டிருக்கின்றோம். மேலும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சுயநலம் மிக்கவராக காணப்படுகின்றார். அவருடன் இணைந்து பயணிப்பது குறித்து எந்தவித தீர்மானமும் எடுக்கவில்லை. நபர்களின் முகங்களை மாற்றிக்கொண்டு இருக்காது, கட்டமைப்பு முறையை மாற்றுவதே அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

> **இலங்கை அரசியலின் முழு கருத்தும் பிழையானது. இது இனம், மதம் என பிளவுபட்டுள்ளது. நாங்கள் பிளவுபட்டிருக்கின்றோம். நபர்களின் முகங்களை மாற்றாது கட்டமைப்பு முறையை மாற்றுவதே அவசியம்**

### தேர்தலை காலந்தாழ்த்தும்

## அரசாங்கத்தின் முயற்சிகளை கூட்டாகத் தோற்கடிப்போம்

பா.நிரோஸ்



தேர்தலைக் காலந்தாழ்த்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் மாற்றங்களை, அரசாங்கம் ஏற்படுத்துமாக இருந்தால், அரசாங்கத்தின் அந்த முயற்சியை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தோற்கடிக்கும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

தேர்தலை காலந்தாழ்த்த அரசாங்கத்துக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை தேர்தல் ஆணைக்குழு அரசாங்கத்திடம் கோர வேண்டும். ஆனால், இன்னும் அதனை தேர்தல் ஆணைக்குழு செய்யவில்லை. அதேபோல் தேர்தல் அதிகாரிகளையும் ஆணைக்குழு நியமிக்க வேண்டும். தேர்தலை நடத்துவதற்கான சுயாதீனத்தன்மை ஆணைக்குழுவுக்கு உள்ளது. தேர்தலுக்குத் தேவையான நிதியை குறைபாடின்றி ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த வருடத்தின் இறுதியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவிகள் கிடைக்கும் என அரசாங்கம் பெரும் எதிர்பார்ப்பில் இருக்கிறது. ஆனால், சர்வதேச நாணய நிதியமோ மக்கள் ஆணையை பெற்ற அரசாங்கத்துடனேயே கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வோம் என தொடர்ந்தும் கூறி வருகிறது. நிதி உதவிகளை வழங்குவதாக இருந்தால் அதனை அரசாங்கத்துக்கு வழங்க முடியாது. அரசாங்கம் ஊடாக நாட்டு மக்களுக்கு வழங்குவதே நாணய நிதியத்தின் அபிலாஷையாக இருக்கிறது. இதன்படி மக்கள் ஆணை பெற்ற அரசாங்கம் தொடர்பில் நாணய நிதியம் தொடர்ந்து கூறி வருகிறது.

மக்கள் ஆணையை பெறுவதாக இருந்தால் தேர்தலை நடத்த வேண்டும். உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் செப்டெம்பர் 20ஆம் திகதியே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளது. ஒக்டோபர் இறுதியில் 2022ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழு தயாரித்திருக்க வேண்டும். ஆனால், 18 வயதான இளைஞர் வாக்காளார்கள் தொடர்பில் பிரச்சினை காணப்படுகிறது. இந்த மேலதிக வாக்காளர் பட்டியலை நவம்பர் மூன்றாம் வாரத்துக்குள் தயாரித்து முடிக்க வேண்டும். இதற்கு மேலதிக காலம் எடுத்துக்கொள்ள முடியாது. இதன் பின்னர் தேர்தலுக்கான திகதியை தெரிவு செய்ய வேண்டும். 2023ஆம் ஆண்டு மார்ச் 20க்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான உரிய திகதியை ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டும். இதுவே சட்டநிலைமையாகும்.

இவ்வாறான நிலையிலேயே எதையாவது செய்து, அடுத்த வருடம் மார்ச் 20க்குப் பின்னர் தேர்தலை இழுத்தடித்து தேர்தலை நடத்தாமல் இருக்கவே அரசாங்கம் முயலுகின்றது. ஏனைய விடயங்களை விட தேர்தலை நடத்தக்கூடாது என்பதே அரசாங்கத்தின் பிரதான இலக்காக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

## நாமே மாற்று அரசாங்கம்



அரசாங்கத்தின் அனுமதியின்றியோ அல்லது பொலிஸாரின் அனுமதியின்றியோ பேரணிகள் மற்றும் போராட்டங்களை நடத்த முடியாது என்ற எண்ணப்பாட்டை முற்றாக மாற்றியமைக்க நேற்று முன்தினம் (02) போராட்டத்தின் மூலம் முடிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

போராட்டம் சட்டவிரோதமானது என பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அலுவலகத்திற்கும் பொலிஸார் தனிப்பட்ட முறையில் அறிவித்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த அறிவித்தலை தாம் உள்ளிட்ட எவரும் பொருட்டாக கொள்ளவில்லை என்றும், ஜனநாயக ரீதியாக சுயமாக செல்வதற்கும், போராட்டத்திற்கு செல்வதற்கும்,போராட்டம் நடத்துவதற்குமுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்க முடிந்தமை தாம் அடைந்த பாரிய வெற்றியாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது இந்நாட்டின் மாற்று அரசாங்கமாகும். தற்போது அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் பொறுப்புடன் நடந்து கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சி தலைவர் ஜோக்கரானார்

### தர்மரத்ன தேரர் கூறுகின்றார்

எதிர்க்கட்சி தலைவர் ஜோக்கராக மாறியுள்ளார். வேடிக்கையான விடயங்களை செய்து கொண்டிருப்பதற்கான நேரம் இதுவல்ல என மிஹிந்தல ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி வலவா ஹெங்குனவெவே தர்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இரு ஜனாதிபதிகள் அழைத்தும் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளாது தற்போது வீதிக்கு இறங்கி எதிர்க்கட்சி தலைவர் போராடிக்கொண்டிருக்கிறார். இது என்ன நகைச்சுவை எனவும் தெரிவித்தார். போராட்டக்காரர்கள் வீதிக்கு இறங்கி போராடுவதற்கு பாராளுமன்றத்தில் உள்ள 225 எம்.பிகளும் பொறுப்புக்கூற வேண்டும். இவ்வாறு போராட்டங்களை மேற்கொள்வதால் சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பு ஏற்படும். பொதுமக்களும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பார்கள். இதனால், போராட்டக்காரர்களை ஆட்சியாளர்கள் தேசத்துரோகிகளாகவே பார்க்கிறார்கள்.

இவ்வாறான நிலைமையத் தடுப்பதற்கு மக்களின் குரலுக்கு செவி சாய்த்து, பாராளுமன்றத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். போராடுவதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில்

# காணிகளை கையகப்படுத்தும் செயற்பாட்டை நிறுத்தவேண்டும்

■ க. விஜயரெத்தினம், வா. கிருஷ்ணா

மத்திய அரசாங்கம் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை எடுப்பார் கைப்பிள்ளைகள் போன்று பார்க்காமல், காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்னம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று முன்தினம் (02) மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்படி கூறினார்.

இதன் போது மேலும் தெரிவித்ததாவது: வடக்கு, கிழக்கு பகுதிகளில் தற்போது சுமுகமான நிலைநிலவுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கை அரசாங்கத்தால் யாழ். குடா நாட்டில் வலிவடக்கு பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளைக் கையகப்படுத்துவதற்கான செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இலங்கை அரசாங்கம், படைகளின் பாவனைக்காக தொடர்ந்தும் ஏன் காணிகளைப் பெறுகின்றார்கள் என எனக்குத் தெரியவில்லை. வடக்கு, கிழக்கில் சுமூகமான நிலை இருக்கின்றபோது வடக்கு, கிழக்கில் முப்படைகளுக்கும் எதற்காகக் காணி கையகப்படுத்தப்பட வேண்டும்? மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்பட போகின்றதா? அல்லது, இராணுவம் வேறு ஏதும் திட்டமிட்ட செயற்பாடுகளை தொடங்கி இருக்கின்றதா?

வடக்கு, கிழக்கில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற காணி தொடர்பான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். காரணம், மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை எடுப்பார் கைப்பிள்ளைகள் போன்று பார்க்காமல், உடனடியாக இந்தக் காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகளை வடகிழக்கில் நிறுத்த வேண்டும் என இதன்போது வேண்டுகோள்விடுத்தார்.

காரைதீவு பிரதேசத்தில்

## மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் செயற்றிட்டம்

■ வி.ரி சகாதேவராஜா

காரைதீவு பிரதேச மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் செயற்றிட்டத்தை காரைதீவு பிரதேச சபை முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடல், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நேற்று (03) நடைபெற்றது.

இக் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள், அவர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளுக்கான உதவிகள், ஊன்றுகோல், சக்கர கதிரை போன்ற உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.



இனிவரும் காலங்களிலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் ஏனைய நிறுவனங்களினதும் அனுசரணையின் மூலம் பெற்றுக்கொடுக்க முயற்சி மேற்கொள்வதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

## ஞாயிறு வரை தொடர்ந்து மழை

■ கனகராசா சரவணன்

இலங்கையில் நேற்று (03) காலை 8.30 மணிவரையிலான கடந்த 24 மணித்தியாலயத்தில், அதிகூடிய மழைவீழ்ச்சி நுரைச்சோலையில் 132 மில்லி லீற்றராகவும் மட்டக்களப்பில் 9.1 மில்லி லீற்றராகவும் பதிவாகியுள்ளதுடன் ஞாயிற்றுக்கிழமை (06) வரை மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என மட்டக்களப்பு மாவட்ட வளிமண்டல திணைக்கள பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் ரமேஷ் தெரிவித்தார்.

இலங்கையை சூழவுள்ள பகுதிகளில் உருவாகியுள்ள கீழ் வளிமண்டல தளம்பல் நிலையால் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது.

மகிழடித்தீவு இறால்பண்ணையில்

## கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்ந்ததற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை படுகொலை தினத்தை நினைவு கூர்ந்ததற்காக, கொக்கட்டிச்சோலை பொலிஸாரால், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு விசாரனைகள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றின் பதில் நீதிபதி தியாகேஸ்வரன் முன்னிலையில் நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் ஆகியோரிடம் வழக்கு விசாரணையின்போது வாக்குமூலங்கள் பெறப்பட்டன. குறித்த வழக்கு தொடர்பான விசாரணை, 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மகிழடித்தீவு இறால்பண்ணையில் 1987ஆம் ஆண்டிலே தஞ்சம்புகுந்த 150 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் அரசபடைகளால் கொலை செய்யப்பட்டதை நினைவுகூருவதற்காக மகிழடித்தீவில் அமைந்துள்ள நினைவு துபியில் 2022ஆம் ஆண்டு அஞ்சலி செலுத்தியதற்காகவே கொக்கட்டிச்சோலை பொலிஸார் 13.10.2022 திகதி, கோவிந்தன் கருணாகரம் எம்.பி, தர்மலிங்கம் சுரேஸ் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் ஆபத்தான தொழில்

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

மிகவும் ஆபத்தான தொழிலாகவே இந்த அரசியலைப் பார்ப்பதாக கிழக்கு மாகாண முன்னாள் பிரதி தவிசாளரும் சுகாதார அமைச்சரும் தற்போதைய ஏறாவூர் நகர சபையின் உறுப்பினருமான எம்.எஸ் சுபைர் தெரிவித்தார்.

அகால மரணமடைந்த ஏறாவூர் நகர சபையின் உப தவிசாளரான அப்துல்சாலி முஹம்மத் றியாழின் அனுதாபப் பிரேரணையின்போது உரையாற்றுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று (03) சபையின் தவிசாளர் எம்.எஸ் நழிம் தலைமையில் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, தொடர்ந்து உரையாற்றிய சுபைர், அவர்களின் குறைகள் தீர்க்கப்படாதபட்சத்தில், அரசியல்வாதிகளை மக்கள் கடிந்து கொள்கின்றார்கள். அதேபோன்று, சிலர் எங்களை ஊழல்வாதிகளாகப் பார்க்கின்றார்கள். சிலர் அரசியல்வாதிகளை ஊழல்வாதிகளாக மாற்றுவதற்கு முயல்கிறார்கள். இப்படி பல சவால்களை, மக்கள் மத்தியில் இருக்கின்ற அரசியல்வாதிகள் எதிர்கொள்ளும் சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால்தான் அரசியல் ஓர் ஆபத்தான தொழிலாகக் காணப்படுகின்றது என்றார்.

26.10.2022 அன்று அகால மரணமடைந்த றியாழ் (வயது 42) மீதான அனுதாபப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.




## ஊடகக் கற்கை செயலமர்வு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் ஏற்பாட்டில் தகவல் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மத்தி. வலயத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் உயர்தர மாணவர்களுக்கான ஊடகக் கற்கை செயலமர்வு நேற்று முன்தினம் (03) காத்தான்குடியில் நடைபெற்றது.

க.பொ.த உயர் தரத்தில் ஊடகக் கற்கைநெறியைக் கற்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஊடக செயலமர்வு, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் பொறுப்பதிகாரி வடிவேல் ஜீவாநந்தன் தலைமையில் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ. நவேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இச் செயலமர்வுக்கு வளவாளர்களாக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ரீ.எல் ஜவ்பர்கான், றீம் ஸ்பேஸ் அகடெமியின் விரிவுரையாளர் சரபுல் ஆதில் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

சமூக வலைத்தளங்களை கையாள்வதும் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாகவும், ஊடகத் துறையும் அனுபவ பகிர்வும் மற்றும் நவீன டிஜிடல் ஊடகத்துறையும் சவால்களும், வளர்ச்சியும் எனும் தலைப்புக்களில் வளவாண்மை இடம்பெற்றிருந்தது.

இச்செயலமர்வில் பங்குபற்றிய மாணவர்களுக்கு, அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் கையளிக்கப்பட்டன.

இழப்பீடுகளுக்கான நடமாடும் சேவையில்

# 191 நட்டஈட்டு கொடுப்பனவு காசோலைகள் வழங்கப்பட்டன

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் நடமாடும் சேவை நேற்று (03) மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க. விமலநாதன் தலைமையில் நடைபெறும் குறித்த நடமாடும் சேவையில், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.எல்.எம் ஹசீம் கலந்து கொண்டிருந்தார்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கெனவே அனுப்பப்பட்ட நிதி தொடர்பான விண்ணப்ப



கோவைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவற்றைப் பூரணப்படுத்தும் முகமாக இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நடமாடும் சேவையில் 1,241 பூரணப்படுத்தப்படாத கோவைகளின் சேவைகள், துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படுகிறது. இதனூடாக அவர்களுக்கான கொடுப்பனவுகள் துரிதப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் 191 பேருக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கான காசோலைகள் மாவட்ட செயலாளரிடம் வழங்கி வைக்கப்பட்டது. இவை, பிரதேச செயலாளர் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன.

காக்கைதீவு மண்டபத்தில் தங்கியுள்ள மக்களுக்கு

## சுகாதார வசதிகளுக்கு ஏற்பாடு



■ மு. தமிழ்ச்செல்வன்

கடந்த சில நாள்களாகப் பெய்த கன மழை காரணமாக, இடம் பெயர்ந்து காக்கைதீவு கடற்றொழிலாளர் மண்டபத்தில் தங்கியுள்ள மக்களை, நேரில் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் திலிப் லியனகே மண்டபத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கான சுகாதார வசதிகளை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 12 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து காக்கைதீவு மீனவ சமூக மண்டபத்தில் செவ்வாய்க்கிழமையில் (01) இருந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று முன்தினம் (02) நேரடியாகச் சென்று ஆய்வு செய்ததோடு, உரிய சுகாதார வசதிகளை வழங்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

## பரிசளிப்பு விழா நாளை

கரவெட்டி யா/ விக்னேஸ்வரக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் சிவபாதசுந்தரம் கலையரங்கில் கல்லூரி அதிபர் பொ. அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி இரஞ்சினி லபோசன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வை. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் நிறுவுநர் தின உரையை வடமராட்சி உதவி கல்வி பணிப்பாளர் (கணிதம்) திருமதி சுதர்சினி சிறீகாந்தனும் வரவேற்புரையை கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கலாதேவி குகானந்தனும் ஆசியுரை ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் செவ்வந்திநாதக்குருக்கள், அருட்சகோதரி மேரி சயந்தி ஆகியோரும் நன்றியுரை இ.சு.முரளிதரன் ஆசிரியரும் வழங்கவுள்ளனர்.

## மட்டுவிலில் பொருளாதார மத்திய நிலையத்தை மீளஇயக்க நடவடிக்கை



■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம், மட்டுவிலில் அமைக்கப்பட்டு இயங்காமலுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானும் நேற்று (03) பார்வையிட்டனர்.

சுமார் 200 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 20 வர்த்தக நிலையங்களை உள்ளடக்கியதாக இந்த வர்த்தக மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அமைக்கப்பட்டுள்ள வியாபார மத்திய நிலையத்தை விவசாயிகளுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் வினைத்திறனாக செயற்படுத்துவது தொடர்பாக, மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள், விவசாய சங்கத்தின் பிரதிநிதிகள், மற்றும் வர்த்தகர்களின் பிரதிநிகள் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோர் ஆலோசனைகளை நடத்தினர்.

நல்லாட்சி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை, 2022 மார்ச் மாதம் 20ஆம் திகதி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின்

## சிநேகபூர்வ கலந்துரையாடல்




■ நிதர்சன் வினோத்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் நேற்று (03) யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் பொழுது இரண்டு ஒன்றியங்களுக்கும் இடையிலான எதிர்காலத் திட்டமிடல்கள், தமிழ் தேசிய பரப்பினுள் மாணவர் ஒன்றியங்களாக ஆற்ற வேண்டிய செயற்றிட்டங்கள் என ஆக்கபூர்வமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## 154 இடைத்தங்கல் முகாம்கள் ஆயத்த நிலையில்

■ செ. கீதாஞ்சன்

பருவப்பெயற்சி மழை காரணமாக நேரிடும் இடர்பாடுகளை எதிர்கொள்ள, முல்லைத்தீவு மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் சின்னத்தம்பி லிங்கேஸ்வர குமார் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (03) துணுக்காய் பிரதேச செயலாளர் லதுமீரா தலைமையில் நடைபெற்ற பருவப்பெயர்சி மழை காரணமாக நேரிடும் இடர்பாடுகளை எவ்வாறு



எதிர்கொள்ளவேண்டும் என்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்;

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 35 இடைத்தங்கல் முகாம்கள் ஆயத்த நிலையில் இருப்பதாகவும் மாவட்டத்தில் 154 இடைத்தங்கல் முகாம்கள் ஆயத்த நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.



## பழைய பாலத்துக்கு புத்துயிர்

என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை- மாகமன வீதியின் யட்டியாந்தோட்டை களனி கங்கை ஊடாக 1902ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட கராகொட பாலமானது, விரைவில் புனரமைக்கப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

குறித்த பாலத்தை புனரமைப்பது தொடர்பான கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், பெருந்தெருக்கள் அமைச்சு, நிதிஅமைச்சு மற்றும் சப்ரகமுவ மாகாண சபை என்பன இணைந்து இந்தப் பாலத்தை புனரமைப்பதற்க்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பாலத்தை புனரமைக்க 413 மில்லியன் ரூபாய் செலவாகவுள்ளதாகத் தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஸ்ட பணிப்பாளர் தம்மிக ஜயகொடி, 118 மீற்றர் நீளமான இந்தப் பாலத்தில் 5 மீற்றர் அகலத்தில் நடைபாதையும் அமையவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## போலி நாணயத்தாளுடன் நால்வர் கைது

எம். செல்வராஜா

ஐயாயிரம் ரூபாய் போலி நாணயத்தாளுடன் இராணுவ சிப்பாய் தியத்தலாவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தியத்தலாவை நகரிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் நாணயத்தாளை வழங்கி, மதுபானத்தைக் கொள்வனவு செய்ய முயன்றுள்ளார்.

இதன்போது இந்த நாணயத்தாள் தொடர்பில் சந்தேகம் கொண்ட மதுபான விற்பனை நிலையத்தின் உரிமையாளர், அது குறித்து தியத்தலாவை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து தியத்தலாவை பொலிஸார் அந்த நாணயத்தாளை பரிசோதித்த போது, அது போலியானதென்று தெரியவந்த நிலையில், சந்தேகநபரை கைதுசெய்து விசாரித்துள்ளனர்.

இதன்போது, இராணுவ பயிற்சிப் பாடசாலையின் கணினியைப் பயன்படுத்தி இரண்டு ஐயாயிரம் ரூபாய் நாணயத்தாள்களைத் தான் பெற்றுக்கொண்டதாகவும் இச் செயற்பாடுகளுக்கு மேலும் மூன்று இராணுவ சிப்பாய்கள் உடந்தையாக இருந்ததாகவும் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் கூறியுள்ளார்.

இதனையடுத்து மூன்று இராணுவ பயிலுநர்கள் கணினித் தொகுதிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தியத்தலாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகர தயாரட்ண கூறினார்.

## மரம் முறிந்து விழுந்ததில் பெண்ணொருவர் பலி

ராமு தனராஜா

ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெளித்தன்ன மாவத்தேகம பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் மீது மரமொன்று முறிந்து விழுந்ததில் அப்பெண் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (2) பகல் மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், 48 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

மரம் முறிந்து விழுந்ததில், பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போது, சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மலையக அபிவிருத்திக்கு

# ஜப்பான் உறுதி

### ஜப்பானிய தூதுவர் தெரிவித்தார் என்கிறார் ராதா எம்.பி

நீலமேகம் பிரசாந்த்

மலையகத்தின் அபிவிருத்திக்கு ஜப்பான் உறுதுணையாக இருக்குமென இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உறுதியளித்துள்ளார் என, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

இராதாகிருஸ்ணன் எம். பிக்கும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நுவரெலியாவில் நடைபெற்ற போது, ஜப்பானிய தூதுவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விசேட கலந்துரையாடலில் மலையக மக்கள் தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டதோடு மலையக மக்களின் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கான



பல கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

மேலும் நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஹொலிரூட் ரத் டிவிசனில் 2018ஆம் ஆண்டு பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன். தாதியர் பயிற்சி நிலையம், தொழிற்பயிற்சி நிலையம், ஆசிரியர் பயிற்சி நிலையம், முன்பள்ளி பாடசாலை போன்றவற்றை அமைப்பதற்கான நிதி உதவிகளை தருவதாக ஜப்பானிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாகவும் ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்தக் கோரிக்கைகள் அப்படியே நிறுத்தப்பட்டு இருப்பதாகவும் இராதாகிருஸ்ணன் தெரிவித்ததோடு அதை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவியையும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ஜப்பானில் மலையக இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகள், ஜப்பானிய மொழியை இலங்கையில் பயில்வதற்கான ஆசிரியர்கள் உட்பட சிறுகைத்தொழில் செய்வோர்களுக்கான உதவிகள் போன்றவை தொடர்பாகவும் இலங்கைக்கான ஜப்பானிய தூவரிடம் கலந்துரையாடப்பட்டது.

அவ் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்று, அவற்றை உடனடியாக நிறைவேற்ற ஜப்பானிய அரசாங்கத்திடம் கலந்துரையாடி, விரைவில் அதற்கான தீர்வை வழங்குவதாகவும் ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்தார்.






ஜப்பான் ஊடாக உலக உணவு திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள 25 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உலருணவு பொருட்களை வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு, இராகலை தோட்டத்தில் நேற்று (03) நடைபெற்றது. (ஆ. ரமேஸ்)



## 4 நாள்களுக்குப் பின்னர் ஹட்டனுக்கு பெட்ரோல்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டனிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 4 நாள்களின் பின்னர் பெட்ரோல் விநியோகிக்கப்பட்டது. பெட்ரோலைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் வாகனங்கள் காத்திருந்தன.

பெட்ரோலின் விலை குறைவடையவுள்ளதென வெளிவந்த தகவல்களையடுத்து, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் பெட்ரோல் கொள்வனவுக்கான முன்பதிவை வழங்காமையால் ஹட்டன் நகரில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மவுசாகலையில் மண்சரிவு அபாயம்

## 8 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

ராமு தனராஜா



மண்சரிவு எச்சரிக்கையைத் தொடர்ந்து, கனவரல்ல, மவுசாகலை தோட்டத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் தற்காலிக முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள், கொடுகாத்தன்ன சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (02) மாலை முதல் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள், 9 பெண்களும் 4 ஆண்களும் 12 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

கோப்பி செய்கையென தெரிவித்து

## விடுதி அமைக்க ஏற்பாடென பிரதேசவாசிகள் குற்றச்சாட்டு

ரஞ்சித் ராஜபக்ஷ



நுவரெலியா, கந்தேஎல நீர்த்தேக்கத்துக்கு அருகிலுள்ள வெற்றுக் காணியை தனியாருக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேசவாசிகளால் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மீபிலிமான, திமுதுகம பிரதேசத்தில் அரசாங்கத்தின் விதை உருளைக்கிழங்கு விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான காணியை, தனியாருக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே, பிரதேசவாசிகளால் நேற்று முன்தினம் (02) எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த காணியின் 7.5 ஏக்கர் நிலப்பரப்பானது கோப்பி பயிர்செய்யும் போர்வையில் தனியாருக்கு விற்பனை செய்ய நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அதிக குளிர் பிரதேசமான நுவரெலியாவில் கோப்பி பயிர்செய்கை வெற்றியளிக்காது என்பதுடன், கோப்பி பயிர்செய்கை செய்யப்போவதாகத் தெரிவித்து, அங்கு விடுமுறை விடுதி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் குற்றஞ்சுமத்தினர்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளதாகத் தெரிவித்த பிரதேசவாசிகள், குறித்த காணியை வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரித்து கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவிடம் வினவியபோது, எல்லை நிர்ணயத்தின் போது, குறித்த காணியை பதுளை மாவட்ட செயலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வெளிமட பிரதேச செயலக அலுவலகத்துக்கு உரியதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

எனினும், தூரம் காரணமாக வெளிமட பிரதேச செயலகத்தால் இந்தக் காணியை பராமரிக்க முடியாது என்பதால் இதனை நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு வழங்க வெளிமட பிரதேச செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இந்தக் காணி கோப்பி பயிர்ச்செய்கைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் வேறெந்த கட்டுமானமும் அங்கு இடம்பெறாது என்பதுடன், அக்காணி தனியாருக்கு விற்பனை செய்யப்படாது என்றார்.

மேலும் இந்தக் காணி பல வருடங்களாக அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் சிலரால் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டு, விவசாயம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.



டெஸ்போட்டில் மண்சரிவு

## போக்குவரத்தும் பாதிப்பு

டி.சந்ரு

மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால், நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா, டெஸ்போட் பகுதியில் நேற்று முன்தினம் (02) மாலை மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், நுவரெலியா, தலவாக்கலை, மெராயா வழியூடான டயகமைக்கான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டதுடன் தற்போது அந்த வீதியூடனான போக்குவரத்து ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வீதியோரங்களில் பல இடங்களில் மண்சரிவு ஏற்படுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளதால், பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

நல்லதண்ணி த.ம.வியில்

## மாணவர்கள் பெரும் அவதி

நீலமேகம் பிரசாந்த்

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மஸ்கெலியா நல்லதண்ணி தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறத்தாழ 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விக் கற்கும் பாடசாலையில் 31 ஆசிரியர்கள் தேவை என்ற நிலையில், வெறுமனே 17 ஆசிரியர்கள் மாத்திரமே பணியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனேகமான வகுப்புகள் பாடவேளைகளில் ஆசிரியர்களின்றி கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை என்றும் பெற்றோர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாக இந்நிலைமையே காணப்படுகின்றது. இப்பாடசாலையிலிருந்து இடம்மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் இதனால் மாணவர்களின் கல்வி ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஆசிரியர்களை உடன் நியமிக்க ஹட்டன் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்களும் மாணவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# நொடிக்கும் மேடையின் மேலேறி ஆடுவதில் அர்த்தமில்லை

ஊர் மக்கள் எல்லோரும் கூடியிருந்து, பார்த்து, இரசித்து, கைத்தட்ட வேண்டுமாயின் கட்டப்பட்டிருக்கும் மேடை, பலமானதாக இருக்கவேண்டும். நொடிக்கும் மேடையில் ஏறி, தட்டுத்தடுமாறுவோருக்கு கேலியையும் கிண்டலையும் ஹூ அடிக்கும் சத்தத்தையும் மட்டுமே கேட்கும் நிலைமை ஏற்கட்டுவிடும். ஆக, எப்போது மேடையேற வேண்டும் என்ற புரிதல் முக்கியமாகும்.

என்னதான் மேடை, பலமானதாக இருந்தாலும் அதில் ஏறுவதற்கும் மக்கள் பங்கேற்பதற்கும் ஜனநாயகம் முக்கியமாகும். ஜனநாயகத்தை பாதுகாக்குமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் போராட்ட உரிமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவோ, இடையூறுகளை ஏற்படுத்தவோ, பலவந்தமாக முடக்கவோ அரசாங்கத்துக்கு எவ்விதமான உரிமையும் இல்லை.

'அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைக் கொள்கையை நிறுத்த வேண்டும்', 'பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை வாபஸ் பெறவேண்டும்' போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நவம்பர் 2ஆம் திகதி, கொழும்பில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டம் தென்னிலங்கை பெரும்பான்மை மக்களுக்கு புதிதாகும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலும் அவற்றுக்கு வெளியிலும் வாழும் தமிழர்களும் அச்சட்டம் அமல்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே, வேதனைகளையும் சோதனைகளையும் அனுபவித்துக்கொண்டே இருக்கின்றனர். அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் பத்து, பதினைந்து வருடங்களுக்கு மேல் சிறைவாசம் அனுபவிக்கின்றனர்.

அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் சிலர், பொதுமன்னிப்பின் கீழ் கொஞ்சம், கொஞ்சமாக விடுவிக்கப்படுகின்றனர். ஆனாலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. ஜனநாயக நாடொன்றின் பிரஜைகளுக்கு போராடும் உரிமையுள்ளது.

நாட்டை நல்வழியில் கொண்டுசெல்வது அரசாங்கத்தினது மட்டுமன்றி எதிர்க்கட்சிகளினதும் பொறுப்பாகும். எரிந்து கொண்டிருக்கும் பொருளாதார பிரச்சினை, தீப்பிழம்பாகி விட்டால், ஒருவாளி தண்ணீர் ஊற்றி அணைத்துவிடமுடியாது என்பதை சகலரும் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்நிலையில், கொழும்பு போராட்டத்தின்போது மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், அரசாங்கத்துக்கு அவ்வளவு அழுத்தத்தை கொடுக்கவில்லை. பங்கேற்றிருந்த கட்சிகளின் பிரதிநிதிகளும் இடைநடுவிலேயே நழுவிச் சென்றுவிட்டனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள் ஊடாக ஓர் அழுத்தத்தை பிரயோகிக்கலாம்; அவையே தீர்வாகாது. நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில், முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, அதனை வெகுசீக்கிரமாக அமல்படுத்தவேண்டும். இல்லையேல் இன்னும் அதளபாதாளத்துக்குள் நாடு விழுந்துவிடும். அதன்பின்னர், தூக்கியெடுப்பது குதிரைக் கொம்பாகிவிடும்.

அரசாங்கத்தால் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்தும் மிகச்சரியானவை என்பதற்கு எதிர்காலமே பதில்சொல்லும். ஆனாலும், தவறான வழியில் பயணிக்கும் அரசாங்கத்தை, சரியான பாதையில் தூக்கி நிறுத்தவேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளின் கைகளிலேயே உள்ளது. அதற்கு ஆர்ப்பாட்டம் மட்டுமே ஆயுதமாகாது.

நாடு இருந்தால்தான் அரசியல் செய்யமுடியும். நொடிக்கும் மேடையின் மேலேறி ஆடுவதில், எவ்விதமான அர்த்தமும் இல்லை என்பதை நினைவில் கொள்க!


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எல்லா விடயங்களும் படித்தவர்களுக்கு மட்டும்தான் தெரியும் எனச் சொல்கின்றோம். ஆனால், படிக்காதவர்களில் அநேகம் பேர், அரசியலில் ஆதிக்கம் செய்துள்ளனர்.

கல்விமான்களில் பலரும் அரசியலை விரும்புவதில்லை. அனுபவஞானம், உலகோடு ஒன்றித்த சிந்தனைகள் கொண்டவர்கள், எந்தத்துறையிலும் தோல்விகண்டதில்லை.

பிரபல தொழில் அதிபர்கள் யாவரும் மெத்தப்படித்தவர்கள் அல்லர்; ஆனால், அவர்கள் தங்கள் நிறுவனங்களில் படிப்பும் அனுபவமும் நிறைந்தவர்களை வைத்துக்கொள்கின்றார்கள்.

அனுபவங்களுடன் கல்விஞானம், ஒழுக்கம், நேர்மை முதலியன எல்லாப் பதவிகளுக்கும் தேவையானவை. ஆரம்பத்தில் சாதாரண நிலையில் தொழில் தேடியவர்கள், படிப்படியாக நிறுவனத்தின் தலைவராகவும் அரசாங்க தொழிலில் உயர் பதவியையும் அடைந்து முன்னேறிய பலர் சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள்.

நம்பிக்கை, செய்கருமங்களில் பற்று, நேர்மை ஆகியவை ஒன்றாக இணைந்தால், வெற்றி மேல் வெற்றி கிடைத்தே விடுகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சீனா: புதிய கூட்டாளிகளும் பழைய எதிரிகளும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சீனா கம்யூனிஸ்ட் கட்சி, அதன் 20ஆவது தேசிய காங்கிரஸை ஒக்டோபர் 16 முதல் ஒக்டோபர் 22 வரை நடத்தியது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இம்மாநாட்டில், கட்சியின் 96 மில்லியன் உறுப்பினர்களின் பிரதிநிதிகள், அதன் உயர்மட்ட தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் கட்சிக்கு எதிர்கால திசையை அமைப்பதற்கும் கூடினார்கள்.

இந்த ஆண்டு காங்கிரஸின் முக்கிய கருப்பொருள்களில் ஒன்று 'நவீனமயமாக்கலுக்கான சீனாவின் பாதை' மூலம், நாட்டின் 'புத்துணர்ச்சி' ஆகும்.

இம்மாநாட்டுக்கு, அதன் பொதுச் செயலாளரான ஷி ஜிங்பிங் சமர்ப்பித்த அறிக்கையில், சீனாவை 'ஒரு நவீன சோசலிச நாடாக' கட்டியெழுப்புவதற்கான முன்னோக்கிய வழியை வரைந்துள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார். 64 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையானது, சீனாவின் அபிவிருத்தியையும் நாகரிகமான சமூக விழுமியங்களையும் கொண்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதையும் பற்றியதாக அமைந்துள்ளது. இந்த முன்மொழிவுகள், சீனாவுக்கு மட்டுமல்ல; ஏனைய மூன்றாமுலக நாடுகளுக்குமானவை.

இந்த அறிக்கை இரண்டு விடயங்களை முன்மொழிகிறது. முதலாவது, தொடங்கியுள்ள 'சோசலிச நவீனமயமாக்கலை' 2020 முதல் 2035 வரையான காலப்பகுதிக்குள் நிறைவு செய்தல்.

இரண்டாவது, 'அமைதியான நவீனமயமாக்கல்' மூலம் சீனாவை வளமான, வலுவான, ஜனநாயக, பண்பாட்டு ரீதியாக முன்னேறிய, இணக்கமான 'நவீன சோசலிச நாடாக' உருவாக்குதல். இதை 2049 வரை (மக்கள் சீனக் குடியரசு நிறுவப்பட்டதன் நூற்றாண்டு) நிலைநிறுத்தல். இவற்றை எவ்வாறு சாத்தியமாக்குவது என்பதற்கான விரிவானதும் விளக்கமானதுமான வரைபடத்தை இவ்வறிக்கை கொண்டுள்ளது.

இன்று எதிரிகளையும் நண்பர்களையும் கொண்ட உலகில், தலையாய பொருளாதார சக்தியாக சீனா வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி, திடீரென்று ஏற்பட்டதல்ல. அதன் பின்னால், மிகக் கவனமான திட்டமிடலும் உழைப்பும் மக்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பும் இருக்கிறது.

1949இல் மாஓ சேதுங் தலைமையில், சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தபோது, அந்த நாடு உலகின் 11ஆவது ஏழை நாடாக இருந்தது. இன்று உலகின் முதன்மையான பொருளாதார வல்லரசாக வளர்ந்துள்ளது.

இம்மாநாட்டின் வழி, மூன்றாவது முறையாக சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதியாக ஷி ஜிங்பிங் தெரிவாகியுள்ளார். மாஓ சேதுங்குக்குப் பிறகு, ஒரு தசாப்தத்துக்கு மேல் பதவிவகிக்கும் முதலாவது ஜனாதிபதியாக ஷி ஜிங்பிங் உருவெடுத்துள்ளார்.

இவர் 2012இல் கட்சியின் 18ஆவது தேசிய காங்கிரஸில் பொதுச் செயலாளராகத் தெரிவாகி, மார்ச் 2013இல் சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர், நாடு குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் சந்தித்துள்ளது.

பொருளாதார ரீதியாக, சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக இருமடங்காக உயர்ந்துள்ளது, 2013 இல் 58.8 டிரில்லியன் யுவானிலிருந்து 2021 இல் 114.37 டிரில்லியன் யுவானாக வளர்ந்து, அதே காலகட்டத்தில், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டுக்கு 6.6 சதவிகிதம் என்ற விகிதத்தில் விரிவடைந்தது. இதற்கிடையில், நாட்டின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2013 மற்றும் 2021க்கு இடையில் கிட்டத்தட்ட இருமடங்கானது.

உலகப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 2021ஆம் ஆண்டில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18.5 சதவீதமாக இருந்தது, மேலும், 2013 முதல் 2021 வரையிலான உலக பொருளாதார வளர்ச்சியில் 30 சதவீதத்துக்கு சீனா காரணமாக இருந்தது. சீனாவும் 2021இல் உலக பொருட்களின் 30 சதவீதத்தை உற்பத்தி செய்தது.

இவ்வறிக்கையின் மையக் கருத்தானது, 'அமைதியான நவீனமயமாக்கலை எவ்வாறு நிறைவேற்றுவது' என்பதாகும். இதை ஷி ஜிங்பிங் பின்வருமாறு சுருக்கமாகக் கூறினார்: "இது அனைத்து நாடுகளின் நவீனமயமாக்கல் செயல்முறைகளுக்கு பொதுவான கூறுகளைக் கொண்டுள்ளது, ஆனால், இது சீனச் சூழலுக்கான தனித்துவமான அம்சங்களால் வகைப்படுத்தப்படுகிறது. கன்பூசியன் தத்துவார்த்த அடித்தளத்தில், சீனப் பண்பாட்டுடன் மிகவும் இணக்கமாக, 'அமைதியான நவீனமயமாக்கல்' ஒரு முழுமையான தத்துவார்த்த அமைப்பை உள்ளடக்கியது. இதன் முக்கியமான அம்சம் யாதெனில், இதுவரை மேற்குலகின் பொருளாதார மாதிரிக்கு மாற்று இல்லை என்று சொல்லப்பட்ட நிலையில், அதற்கு மாற்றாக மேற்குலக ஏகபோகத்துக்குச் சவாலான ஒரு தத்துவார்த்த மாதிரியை முன்மொழிகிறது".

இவ்வறிக்கை உணர்த்த விரும்புவது யாதெனில், ஈரானிய மாதிரி, உகண்டா மாதிரி, பொலிவியா மாதிரி போன்ற அனைத்தும் செல்லுபடியானதாகும். அதுபோலவே, சீனப் பரிசோதனையும் செல்லுபடியாகும். இந்த அறிக்கையின் அடிப்படை, நாடுகள் தத்தம் வளர்ச்சியை நோக்கி, ஒரு சுயாதீனமான பாதையைத் தொடர்வது முக்கியமாகும்.

சமீபத்திய வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால், அமெரிக்க நலன்களுக்கு வெளியே, வளர்ச்சியடைய முயலும் ஒவ்வொரு நாடும், எண்ணற்ற வழிகளில் எவ்வாறு பயமுறுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

இந்நாடுகள், வண்ணப் புரட்சிகள், ஆட்சி மாற்றம், சட்டவிரோதத் தடைகள், பொருளாதார முற்றுகை, நேட்டோ நாசவேலை, படையெடுப்பு ஆகியவற்றின் இலக்காக மாறுகின்றன.

சீனா முன்மொழியும் மாற்றானது, இன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடையும் நாடுகளில் எதிரொலிக்கிறது. ஏனெனில், 140க்கும் மேலான நாடுகளில், மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக சீனா உள்ளது. இந்நாடுகளால், சீனாவின் உயர்தர பொருளாதார வளர்ச்சி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தன்னிறைவு போன்ற கருத்துகளை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

இந்த அறிக்கை, சீனாவுக்கான திட்டவட்டமான கட்டாயத்தை வலியுறுத்தியது. சீனாவின் தொழில்நுட்ப மேலாண்மையை, திட்டவட்டமாகக் குறிக்கிறது. சீனாவின் தொழில்நுட்ப மேலாண்மை, எவ்வாறு சீனாவின் தன்னிகரில்லா நிலைக்கு வழிசெய்யும் என்பதையும் கோடிட்டுக்காட்டுகிறது.

குறிப்பாக, குறைக்கடத்திகள் உற்பத்தியில் தடம் புரள எந்தத் தடையும் இல்லை என்பதால், தொழில்நுட்ப தன்னம்பிக்கையை விரைவுபடுத்துகிறது. குறைக்கடத்திகள் மற்றும் அவற்றை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களில், அதன் தொழில்நுட்ப சுதந்திரத்தை விரைவுபடுத்துவதற்கான சீனாவின் உந்துதலை முடக்குவதற்கு அமெரிக்கா கங்கணம் கட்டியுள்ளது. அதன் ஒரு பகுதியே, சீனாவின் குறைக்கடத்திகள் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் ஆகும்.

உலகளாவிய குறைக்கடத்தி தொழிற்றுறையின் அளவு, தற்போது 500 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் அதன் அளவு ஒரு டிரில்லியன் டொலர் என இரட்டிப்பாக்க வாய்ப்புள்ளது.

2030ஆம் ஆண்டளவில் குறைக்கடத்தி தொழிற்றுறை வளர்ச்சியில், சுமார் 40 சதவீதத்தை சீனா வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது, அமெரிக்காவின் தலையாய இடத்தை சீனாவுக்கு வழங்கும். இதுவே, அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்கான உடனடி தூண்டுதலாகவும், அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடம் இருந்து சீனாவின் தொழிற்றுறையை முன்னணியில் இருந்து தடுக்கும் முயற்சியாகவும் உள்ளது.

அயலுறவுக் கொள்கை தொடர்பில், அறிக்கையில் மிகத் தெளிவாக உள்ளது. சீனா எந்த விதமான ஒருதலைப்பட்சவாதத்துக்கும் குறிப்பிட்ட நாடுகளுக்கு எதிராக குறிவைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் பிரத்தியேக குழுக்களுக்கும் எதிரானது.

தற்போதுள்ள உலகளாவிய நிர்வாக முறையானது, மூன்றாமுலக நாடுகளுக்கு மிகவும் நியாயமற்றது. சீனா தன்னை ஒரு நாகரிக அரசாகவும் ஒரு சோசலிச நாடாகவும் உலகின் முன்னணி வளரும் நாடாகவும், ஒரே நேரத்தில் கருதுகிறது.

உலகில் ஆதிக்கம் செலுத்துவதில், தங்கள் நாடு ஆர்வம் காட்டவில்லை என்று சீனா தொடர்ச்சியாகக் கூறிவருகிறது. மனிதகுலத்தின் இக்கட்டான பிரச்சினைகளைத் தீர்க்க, மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்க சீனா விரும்புகிறது. உதாரணமாக, 'ஒருவார் ஒருவழி' முன்முயற்சியானது, 2013 இல் 'வெற்றி-வெற்றி' (இருதரப்புக்கு) ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டின் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

மேலும், இதுவரை 150 நாடுகளில் ஒரு டிரில்லியன் டொலர் முதலீடு மற்றும் கட்டுமான ஒப்பந்தங்களுடன் மிகவும் தேவையான உட்கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. காலநிலை பேரழிவைச் சமாளிப்பதில் சீனாவின் ஆர்வம், கடந்த பத்தாண்டுகளில், உலகின் புதிய காடுகளில் கால் பகுதியை மீளவனமாக்கி, மரங்களை நட்டுள்ளதோடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடு மற்றும் மின்சார வாகன உற்பத்தியில் உலகத்தின் முதன்மையாளராகத் திகழ்கின்றது.

சீனாவின் பொருளாதாரக் கூட்டணிகள் இன்று அதிகரிக்கின்றன. உலகளாவிய ரீதியில், சீனாவின் பொருளாதாரச் செல்வாக்கு, அமெரிக்காவை விஞ்சியுள்ளது. இது, மேற்குலகுக்குப் புதிய நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. சீனாவுக்குப் புதிய நண்பர்களைத் தந்துள்ளது. உலகை ஆட்டிப்படைக்கும் பொருளாதார நெருக்கடியும், உக்ரேன் யுத்தமும் சீனாவை முதன்மையான நிலைக்குத் தள்ளியுள்ளன. ஷியின் அடுத்த ஐந்து ஆண்டுகள் உலகின் எதிர்காலத்தையே தீர்மானிக்க வல்லன.

## கழிதங்கள்

### அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரிப்பு



அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லைகள், நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறை, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில், கடந்த சில நாள்களாக நள்ளிரவு வேளைகளில், மக்கள் வாழும் குடியிருப்பு பிரதேசங்களில் காட்டு யானைகள் புகுந்து, வீட்டிலுள்ள மரங்களை நாசம் செய்வதுடன் சொத்துகளுக்கும் சேதம் விளைவித்து விட்டுச் சென்றுள்ளன.

சுனாமி குடியிருப்பு பிரதேசமான சாய்ந்தமருது, வொலிவேரியன் கிராமத்தில், குடியிருப்பு வீட்டில் புகுந்து தென்னை மரங்கள், வாழை, பப்பாசி, தோடம்பழ மரங்கள் போன்றவற்றை அழித்து விட்டுச் சென்றுள்ளன.

இவ்வாறு தினம் தினம் காட்டு யானைகள் ஊருக்குள் வந்து, வீட்டு உடைமைகளை நாசம் செய்வதால், யானைகள் ஊருக்குள் வராமலிருக்க சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கையை அவசரமாக எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எம்.எஸ்.எம் ஸாகிர்




### வரிக் கொள்கையுடன்

# அரசால் ஏற்படுத்தப்பட வேண்டிய ஏனைய சீராக்கங்கள்



ச. சேகர்

நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள பொருளாதாரத்தை சீராக்கும் வகையில், நிதி அமைச்சர் எனும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிய வரிக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனூடாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்புகளுக்கு முன்னர், 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய வருமான வீதத்துக்கு நிகரான அரச வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நடப்பு ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், நாடு திவாலாகியுள்ளதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, வரி வருமான அதிகரிப்பு தவிர்க்கப்படமுடியாத விடயமாக மாறியிருந்தது. அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட சந்திப்புகளைத் தொடர்ந்து, இந்த வரிமறுசீரமைப்புகளினூடாக அரச வருமானத்தை அதிகரிக்கச் செய்வது பற்றிய நிபந்தனைகளும் கண்டிப்பாக முன்வைக்கப்பட்டிருக்கும்.

புதிய வரிக் கொள்கையின் பிரகாரம், மாதாந்தம் ரூ. 100,000 க்கும் அதிகமான வருமானம் பெறும் எந்தவொரு நபரும் வரி செலுத்த வேண்டும். இதற்கு மேலதிகமாக, கூட்டாண்மை வரி ஆகக்குறைந்தது 24 சதவீதம் என்பதிலிருந்து 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கும் வரிக்குமிடையிலான விகிதம் 2019ஆம் ஆண்டில் 12.7% ஆக காணப்பட்டது. இது 2021 ஆம் ஆண்டில் 8.7% ஆக வீழ்ச்சியடைந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வரி குறைப்புகள் காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டதுடன், பொருளாதாரத்தின் சரிவும், தற்போதைய நெருக்கடி நிலைக்கு காரணமாகின என்றே குறிப்பிடலாம்.

தற்போதைய தேவையாக அமைந்துள்ள அரச வருமானத்தை அதிகரிப்பது மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய வரிக் கட்டமைப்பை மீள நிறுவுவது போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் புதிய வரி முன்மொழிவுகள் அமைந்துள்ளன.

ஆனாலும், 2019 ஆம் ஆண்டில் நிலவிய மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடுகையில், வரலாற்றில் இதுவரை காலமும் பதிவாகியிருக்காத மிகவும் மோசமான நிதி நெருக்கடிக்கு தற்போது நாட்டு மக்கள் முகங்கொடுத்துள்ள நிலையில்,

> **மக்கள் பிரதிநிதிகள், மக்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளவில்லை**
>
> **நாட்டுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தும் அரச நிறுவனங்கள், வரிப் பணத்தை வீணடிக்கின்றன**
>
> **மோசடிகளை அரசு தடுத்தால் வரிப் பணத்தை முறையாகப் பயன்படுத்த முடியும்**

செப்டெம்பர் மாதம் 69.8% ஆக பதிவாகியிருந்த நுகர்வோர் பணவீக்கச் சுட்டெண், நடப்பு ஆண்டில் முதன் முறையாக ஒக்டோபர் மாதத்தில் 66% ஆக வீழ்ச்சியடைந்திருந்தது.

கடந்த மூன்று வருடங்களில் ராஜபக்ஷவின் நிர்வாகத்தில் நாணயமும் 100%க்கு மேலாக மதிப்பிறங்கியுள்ளது. இவ்வாறான அனைத்து காரணிகளும் முன்மொழியப்பட்டுள்ள இந்த வரி அதிகரிப்பை மக்களுக்கு அதிகளவு சுமையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும்.

எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது என்பது தற்போது பெரும்பாலான அனைவருக்கும் தெரிந்த விடயமாக அமைந்திருப்பதால், கடினமான இந்த வரி அறவீட்டை வெளிப்படையானதாகவும், அரசாங்கத்தின் எந்தப் பிரிவுகளில் செலவிடப்படுகின்றது என்பதை பொது மக்களுக்கு அறியப்படுத்துவதனூடாக அவர்களின் ஆதரவை ஓரளவேனும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அரச துறைகளில் கடந்த காலங்களில் அளவுக்கதிகமாக தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக அரசியல் ஆதரவாளர்கள் பெருமளவில் அரச பணிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். தற்போது சுமார் 1.5 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் அரச நிறுவனங்களில் பணி புரிவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பெருமளவு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பல அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்கள் போன்றன, தாம் செலவிடும் பணத்துக்கு எவ்விதமான பெறுமதியையும் ஏற்படுத்துவதில்லை என்பதுடன், மாறாக பொது மக்கள் மீது மேலும் சுமையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. மேலும், நாட்டை ஆட்சி செய்வதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள், இந்த நெருக்கடியான காலப்பகுதியில் செலவைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மக்களுக்கு முன்மாதிரியான எந்தவிதமான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. ஒரு சிலர் மாத்திரம் தாம் அமைச்சுக்குரிய சம்பளமின்றி சேவையாற்றுவதாக கூறினாலும், அவற்றை உறுதி செய்யும் பொறிமுறை, வெளிப்படைத்தன்மை இல்லை.

அரசின் செலவில் பெருமளவு பங்கைக் கொண்டுள்ள பாதுகாப்புத் துறையினால், பொருளாதார ரீதியில் பங்களிப்புச் செய்வதில்லை. இந்தத் துறையின் மறுசீரமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். உலகின் 17ஆவது மிகப் பெரிய இராணுவப் படையணியை இலங்கை பேணி வருவதுடன், அதனூடாக இராணுவத்தின் தேவைகள் அல்லது நாட்டு மக்களின் பாதுகாப்புத் தேவைகள் முழுமையாக நிவர்த்தி செய்யப்படுகின்றனவா என்பது புலனாகவில்லை.

குறிப்பாக, நாட்டில் குற்றச் செயல்களும் சட்ட விரோதச் செயற்பாடுகளும் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளன. தொடர்ச்சியாக நட்டமீட்டி வரும் அரச நிறுவனங்கள் தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கன் விமான சேவை போன்றன நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் சுமையை ஏற்படுத்தும் அரச நிறுவனங்களாக அமைந்திருப்பதுடன், வரி செலுத்துவோரின் வரிப் பணத்தையும் விரயமாக்குவதாக அமைந்துள்ளன.

அரச நிறுவனங்களிலும், துறைகளிலும் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்துமானால் செலுத்தப்படும் வரிப் பணத்தை சரியான முறையில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். முன்னைய நிர்வாக காலப்பகுதியில் மோசடிகளிலும், குற்றச் செயல்களிலும் ஈடுபட்டவர்கள் என குற்றம்சாட்டப்பட்டவர்களும், அடையாளம் காணப்பட்டவர்களும், தற்போதும் அந்த பதவிகளில் பொறுப்பு வகிக்கின்றமை இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

நாளாந்தம் பணிபுரியும் மக்களிடமிருந்து அறவிடும் வரியை அதிகரிப்பது என்பது, அரசாங்கத்தின் செலவுகளை குறைப்பதுடனும், அரச நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகளை தணிப்பதுடனும் இடம்பெற வேண்டும். அல்லாவிடின், அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு அவசியமான சரியான கொள்கைகளுக்கும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு ஏற்படும்.

---

புதுடெல்லி

# திணறடிக்கும் காற்று மாசு

நாட்டின் தலைநகரான புதுடெல்லியில் காற்று மாசு தலையாய பிரச்சினைகளுள் ஒன்றாக இருந்து வருகிறது. புதுடெல்லியின் காற்றின் தரம் தீபாவளி பண்டிகையின்போது 'மிகவும் மோசம்' என்ற குறியீட்டை எட்டியது.

புதுடெல்லி அரசும் காற்று மாசை தவிர்க்க காற்று சுத்திகரிப்பு கோபுரம் என பல முயற்சிகளை செய்து வருகிறது. இருந்தபோதிலும், தற்போது காற்றின் தரம் மோசமானதையடுத்து புதுடெல்லியின் சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் தலைநகரில் உள்ள மக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அலுவலக பணி செய்ய வேண்டும், வாகன மாசைக் குறைக்க



பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், "முடிந்த அளவிற்கு வீட்டிலிருந்து பணி செய்யவும். கார் போன்ற சொந்த வாகனங்களை வெளியே எடுப்பதை சிறிது காலத்துக்கு மக்கள் தவிர்க்க வேண்டும் என மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். 50 சதவீத மாசு வாகனங்களால்தான் ஏற்படுகிறது" என்றார்.

---

சென்னை

## விருப்பம் இருந்தால் ஹிந்தி படிக்கலாம்

ஹிந்தியை யாரிடமும் திணிக்கவில்லை என்று தெரிவித்துள்ள தமிழ்நாட்டின் பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை, விருப்பம் இருந்தால் ஹிந்தி படிக்கலாம் என்றார்.

சென்னை, தியாகராய நகரில் நடைபெற்ற நிகழ்வில் இளைஞர்கள், அரசியல் ஆர்வலர்கள், ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது, அண்ணாமலை பேசியதாவது: உளவியல், வரலாறு, புவியியல் உள்ளிட்ட பல்வேறு படிப்புகள் படித்திருந்தாலும்கூட, அரசியல் அறிவியல் படிப்பு என்பது அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஓர் அரசியல்வாதி தனது பணியில் வெற்றி பெறுவதற்கு ஒரு கருவி தேவைப்படுகிறது. அதற்கான முயற்சிதான் இந்த பயிற்சி பட்டறை என்றார் என்றார்.

---

கோவை

### கோவை கார் வெடிப்பு

## கிஷோர் மீது வழக்குப்பதிவு



கோவையில் ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி நடந்த கார் வெடிப்பில் ஜமேஷா முபின் உயிரிழந்தான். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் அதிரடி சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கோவை கார் வெடிப்பு சம்பவம் தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்ட கிஷோர் கே.சுவாமி மீது சைபர் கிரைம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அமைதியைக் குலைக்கும் வகையில் பதிவிட்டதாக சைபர் கிரைம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

---

இந்தியா

### ரூபாய் நோட்டு மூலமாக

## பிளவுக்கு வழிசமைக்காதீர்

புதிதாக அச்சிடப்படும் ரூபாய் நோட்டுகளில் மகாத்மா காந்தி படத்தையும் லட்சுமி, விநாயகர் உருவங்களையும் அச்சிட வேண்டும் என்ற கோரிக்கையை புதுடெல்லி முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் முன்வைத்து உள்ளனர்.

இவர்களுடைய இந்தக் கோரிக்கை, அரசியல் ரீதியில் பல்வேறு விவாதங்களை கிளப்பி இருக்கிறது.

இந்தியா பல சாதி, மதங்களை கொண்ட ஒற்றுமையான நாடு. மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் நிலையில் ரூபாய் நோட்டுகளில் லட்சுமி, விநாயகர் உருவங்களை அச்சிடுவது தேவையில்லாத பிரச்சினையை ஏற்படுத்தும். இதன்மூலம் மக்களிடம் ஒற்றுமை சீர்குலைந்து, மக்களிடையே அமைதியின்மையும் பிளவும் ஏற்பட்டுவிடும் என்று கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

---

லக்னோ

## பியர் குடிக்கும் குரங்கு; ஊழியர்கள் புலம்பல்

உத்தர பிரதேசம் மாநிலத்தில் குரங்கொன்று மகா குடிகாரன் போல டின் பியரின் மூடியை அசால்டாக திறந்து குடிக்கும் வீடியோ இணையத்தில் பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குரங்குகள் மலைப்பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. மலைப்பகுதிகளை ஒட்டியுள்ள ஊர்களிலும் அதிகளவில் குரங்குகள் நடமாட்டத்தை காண முடியும்.

மனிதனைப் பார்த்து மனிதன் செய்யும் செயல்களை அப்படியே செய்யும் பழக்கம் கொண்டது இந்தக் குரங்கு இனங்கள்.

பழங்களை சாப்பிடுவதாக இருக்கட்டும் கூல் டிரிங்ஸ் குடிப்பதாக இருக்கட்டும் அனைத்திலும் மனிதனைப்போலவே அப்படியே சாப்பிட்டு பழகிவிடும். இது தொடர்பான பதிவுகள், காட்சிகள் கூட சமூக வலைத்தளங்களில் டிரெண்டிங் ஆகும்.

இந்த நிலையில், உத்தர பிரதேச மாநிலம் ரே பேரலி பகுதியில் குரங்கு ஒன்று பியர் குடிக்கிறதாம். மதுவுக்கு அடிமையானது போல அலையும் அந்தக் குரங்கு, மதுக்கடைகளுக்குள் புகுந்து மதுவை திருடி குடித்து விடுவதாக சொல்லப்படுகிறது. இதனால், மதுக்கடை ஊழியர்கள் புலம்புகின்றனர்.

---

# 1,037 ஆவது சதய விழா




தஞ்சாவூரில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1,037 வது சதய விழாவை முன்னிட்டு, அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. மங்கல இசையுடன் விழா நேற்று (03) தொடங்கியது. பின்னர், தருமபுர ஆதீனம் 27 ஆவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருக்கோயில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்கினார்.



## இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், சிட்னியில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே மொஹமட் றிஸ்வானை வெய்ன் பார்னலிடம் இழந்தது. இதையடுத்து வந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய மொஹமட் ஹரிஸையும் 28 (11) ஓட்டங்களோடு அன்றிச் நொர்கியாவிடம் இழந்த பாகிஸ்தான், அஸாம் மற்றும் ஷண் மசூட்டையும் லுங்கி என்கிடி, நொர்கியாவிடம் இழந்தது.

இதைத் தொடர்ந்து இஃப்திஹார் அஹ்மட், மொஹமட் நவாஸ் ஆகியோர் இனிங்ஸை நகர்த்திய நிலையில் 28 (22) ஓட்டங்களோடு தப்ரையாஸ் ஷம்சியிடம் நவாஸ் வீழ்ந்தார். பின்னர் வந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஷடாப் கான் 52 (22) ஓட்டங்களோடு நொர்கியாவிடம் வீழ்ந்ததோடு, அடுத்த பந்திலேயே நொர்கியாவிடம் மொஹமட் வாஸிம் வீழ்ந்திருந்தார்.

இறுதி ஓவரில் முதற் பந்தில் 51 (35) ஓட்டங்களோடு மொஹமட்டும் ககிஸோ றபாடாவிடம் வீழ்ந்த நிலையில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றது.

பதிலுக்கு 186 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஆரம்பத்திலேயே குயின்டன் டி கொக், றீலி றொஸோவை ஷகீன் ஷா அஃப்ரிடியிடம் இழந்தது. தொடர்ந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் தெம்பா பவுமா 36 (19) ஓட்டங்களுடன் ஷடாப் கானுடன் வீழ்ந்ததோடு, அதே ஓவரிலேயே ஏய்டன் மார்க்ரமும் 20 (14) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.


இந்நிலையில், ஒன்பது ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 69 ஓட்டங்களை தென்னாபிரிக்கா பெற்றபோது மழை குறுக்கிட்டது.
அந்தவகையில் தென்னாபிரிக்க அணியின் இனிங்ஸானது 14 ஓவராகக் குறைக்கப்பட்ட நிலையில் 142 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில், அஃப்ரிடி, மொஹமட் வஸிம், நசீம் ஷா, ஹரிஸ் றாஃப்பிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்த தென்னாபிரிக்கா, 14 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களையே பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கான் தெரிவானார்.

இந்நிலையில், அடிலெய்ட்டில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஒன்று போட்டியில் அயர்லாந்தை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை அவுஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளது.

# பார்சிலோனா தொடர்புகளை மறுத்த அர்டிடா



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவுடன் தன்னைத் தொடர்புபடுத்தும் அறிக்கைகளை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் முகாமையாளர் மிகேல் அர்டிடா மறுத்துள்ளார்.

தவிர, பார்சிலோனாவை அதன் முகாமையாளர் ஸ்கெவி உயர்த்துவதற்காக பணியாற்றியதையும் அர்டிடா பாராட்டியுள்ளார்.

இப்பருவகாலத்தில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் ஆர்சனலை முன்னணிக்கு அர்டிடா வழிகாட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே ஸ்கெவியின் நீண்ட காலப் பிரதியீடொன்றாக தமது முன்னாள் இளம் வீரரான அர்டிடாவை பார்சிலோனா நோக்கியிருந்தது.

இரண்டாவது தடவையாக சம்பியன்ஸ் லீக்கின் குழுநிலைப் போட்டிகளோடு பார்சிலோனா இம்முறை வெளியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# றியல் மட்ரிட்டிலிருந்து வெளியேறும் ஹஸார்ட்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான ஈடின் ஹஸார்ட், அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் கழகத்தை விட்டு வெளியேறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு வரையில் மட்ரிட்டுடன் 31 வயதான ஹஸார்ட் ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றபோதும், நடப்பு பருவகாலத்தில் ஒரு போட்டியையே அவர் ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## 14 வயதுக்கு உட்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடர்:

# சம்பியனானது கிண்ணியா அல் அமீன் வித்தியாலயம்

ஒலுமுதீன் கியாஸ்

அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தால், திருகோணமலை மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடாத்தப்பட்ட 14 வயதுக்குட்ப்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணியா அல் அமீன் வித்தியாலயம் சம்பியனானது.

கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரியை பெனால்டியில் வென்றே அல் அமீன் வித்தியாலயம் சம்பியனானது.

இத்தொடரில் மொத்தம் 18 அணிகள் பங்கு பற்றியிருந்தன. இதில், கந்தளாய் அல்தாரிக் தேசிய பாடசாலை, கிண்ணியா அப்துல் மஜீத் வித்தியாலயம், கிண்ணியா வானல புஹாரி மகா வித்தியாலயம், அல் அமீன் வித்யாலயம், மத்திய கல்லூரி, கிண்ணியா ஆண்கள் பாடசாலை ஆகிய ஆறு அணிகள் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றிருந்தன.

வடகொரியா

# கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம்

1950களில் நடந்த கொரிய போரின் போது வடகொரியாவும், தென்கொரியாவும் தனித்தனி நாடுகளாக பிரிந்தன.
அப்போது முதல் இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான பகைமை நிலவி வருகிறது.
வடகொரியாவின் அணு ஆயதங்களால் தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என கருதும் தென்கொரியா அணு ஆயுதங்களை முழுமையாக கைவிட வடகொரியாவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.
இவ்விவகாரத்தில் தென்கொரியாவுக்கு பக்கபலமாக இருந்து வரும் அதன் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா, வடகொரியா மீது பொருளாதார தடைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.
அது மட்டுமின்றி வடகொரியாவின் அச்சுறுத்தல்களை சமாளிக்கும் விதமாக அமெரிக்க படைகள் கொரிய படைகளுடன் இணைந்து, ஆண்டுதோறும் கொரிய எல்லையில் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.
இக்கூட்டுப்போர் பயிற்சியை ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கை என கூறி வடகொரியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது.
இச்சூழலில் வடகொரியாவின் எதிர்ப்பை மீறி கடந்த மாதம் அமெரிக்க மற்றும் தென்கொரிய படைகள் கொரிய எல்லையில் கூட்டுப்போர் பயிற்சியை தொடங்கின.
ஒரே நாளில் 23 ஏவுகணைகள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணைகளை ஏவி சோதனை செய்து வருகிறது.
மேலும் அந்த நாடு அணு ஆயுத சோதனைக்கு தயாராகி வருவதாகவும் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் உளவுத்துறைகள் எச்சரித்து வருகின்றன.
இந்நிலையில் வடகொரியா நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 23 ஏவுகணைகளை தென்கொரியா எல்லையை நோக்கி வீசியது.
அவற்றில் ஓர் ஏவுகணை இருநாடுகளுக்கு இடையிலான கடல் எல்லையை கடந்து தென்கொரியாவின் சோக்சோ நகரிலிருந்து 60 கி.மீ. தொலைவில் கடலில் விழுந்தது.
அதற்கு பதிலடியாக தென்கொரியா வடகொரியாவை நோக்கி 3 ஏவுகணைகளை வீசியது.
இந்நிலையில் இருநாடுகளுக்கும் இடையில் போர் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆப்கானிஸ்தான்



# மாணவிகளை அடித்து விரட்டிய தலிபான்கள்

ஆப்கானிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், அங்கு பெண்களுக்கு எதிரான பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாக அண்மையில் ‘பெண்கள் தொலைக்காட்சித் தொடர்கள் மற்றும் விளம்பரங்களில் நடிக்கக் கூடாது; ஆண்களின் துணையின்றி வெளியே செல்லக்கூடாது; பெண்பிள்ளைகள் பாடசாலை செல்லக்கூடாது’ உள்ளிட்ட பல்வேறு கடுமையான சட்டங்களை தலிபான்கள் அமல்படுத்தியுள்ளனர்.
அத்துடன் இச் சட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளையும் விதித்து வருகின்றனர்.

அவுஸ்திரேலியா



# 5 சிங்கங்கள் தப்பியோட்டம்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் மிகப்பெரிய மிருகக் காட்சி சாலையொன்று உள்ளது.
இந்நிலையில் நேற்று முன்தினம் (10) காலை குறித்த மிருகக் காட்சி சாலை, பார்வையாளர்களுக்காக திறக்கப்படுவதற்கு முன்பு ஊழியர்கள் வழக்கம்போல் அங்கு விலங்குகளை ஆய்வு செய்து வந்தனர்.
அப்போது கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 5 சிங்கங்கள் மாயமாகி இருப்பதை கண்டு ஊழியர்கள் அதிர்ச்சியடை ந்துள்ளனர்.
இதனையடுத்து அவர்கள் கண்காணிப்பு கெமராக்களை ஆய்வு செய்தபோது 5 சிங்கங்களும் கூண்டில் இருந்து வெளியேறி தப்பியோடியமை தெரியவந்தது.
இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் உருவானது. எனினும் சிங்கம் தப்பிய சமயத்தில் அங்கு பார்வையாளர்கள் யாரும் இல்லை எனக் கூறப்படுகின்றது.
இதனையடுத்து மக்களின் பாதுகாப்பு கருதி குறித்த மிருகக் காட்சி சாலை உடனடியாக பூட்ட ப்பட்டதோடு தப்பியோடிய சிங்கங்களை தேடும் பணியில் ஊழியர்கள் மும்முராக ஈடுபட்டனர்.
அதன்படி கூண்டில் இருந்து தப்பிய ஓடிய சிறிது நேரத்திலேயே அச்சிங்கங்களை ஊழியர்கள் கண்டுபிடித்துள்ளதோடு பாதுகாப்பாக கூண்டுக்குள் அடைத்துள்ளனர்.

இந்தோனேசியா

# 87 திருமணங்கள்: அசத்தும் ‘பிளேபோய் கிங்’

இந்தோனேசியாவைச் சேர்ந்த விவசாயியான கான், தனது 14 ஆவது வயதில் முதல் திருமணம் செய்துள்ளார்.
இந்நிலையில் இதுவரை அவர் 87 திருமணங்களைச் செய்துள்ளார் எனவும், 88 ஆவது முறையாகவும் திருமணம் செய்யவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவர் தன்னுடைய திருமண அனுபவங்கள் குறித்து கூறுகையில், முதல் மனைவியிடம் நான் சரியாக நடந்து கொள்ளாத காரணத்தால் அவள் இரண்டே வருடத்தில் விவகாரத்தை பெற்று விட்டார். பெண்களுக்கு நல்லது செய்யாத விடயங்களை நானும் செய்ய விரும்புவதில்லை. பெண்களுக்கு என் மீது ஈர்ப்பு வர நான் ஆன்மீகத்தின் உதவியை நாடுகிறேன் என்று கூறியுள்ளார். மேலும் இவர் உள்ளூரில் ‘பிளேபாய் கிங்’ என்று அழைக்கப்படுகிறார்.

பிரித்தானியா

# ஓடும் காரில் பிரசவம்; பெண்ணுக்கு அபராதம்

பிரித்தானியாவில் ஓடும் காரில் குழந்தையைப் பெற்றெடுத்த பெண்ணுக்கு அபராதம் விதிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலண்டனை சேர்ந்தவர் பாரா காகனிண்டின். 26 வயதான அவர் ஏற்கெனவே ஒரு வயது ஆண் குழந்தைக்கு தாயாவார். இந்நிலையில் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த அவர், வாடகை காரொன்றில் வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்தார்.

இதன் போது பாராவுக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து பாரா காரிலேயே பெண் குழந்தையையொன்றைப் பெற்றெடுத்துள்ளார்.

பின்னர் கார் வைத்தியசாலையை சென்றடைந்ததும் மருத்துவ ஊழியர்கள் தாயையும், சேயையும் மீட்டு சிகிச்சை அளித்தனர்.



தற்போது இருவரும் நலமாக உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே காரில் குழந்தை பெற்றெடுத்தபோது காரில் ஏற்பட்ட அசுத்தத்தை காரணம் காட்டி பாராவுக்கு வாடகை கார் நிறுவனம் 60 பவுண்டு அபராதம் விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 04 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.